**23.09.2025**

**O.S.No.94/2022**

**வா.சா.1 : சிவக்குமார்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

12) ஆத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.35/2022 என்ற வழக்கு மின் இணைப்பு கொடுக்க கூடாது என்று தாக்கல் செய்த பின்னிட்டு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரிதான். மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்பு என் நிலத்தில் நிலத்தில் மையத்தில் சென்ற மின் கம்பம் மின் இணைப்பு கொடுத்த பின் நிலத்தின் ஓரமாக போடப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு மின் இணைப்பு கொடுப்பதற்கு முன்பாக மேற்படி வழக்கை 35/2022 மற்றும் 94/2022 என்ற இரண்டு வழக்குகளும் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று முச்சலிக்கா எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். அவரது பிரச்சனையை சரி செய்து விட்டார்கள். என்னுடைய பிரச்சனையை சரிசெய்வதற்கு முன்பாகவே பிரச்சனை ஏற்பட்டுவிட்டது.

13) அ.வா.எண்.35/2022ல் கடந்த 25.02.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் உண்மை என்று எற்றுக்கொண்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 25.02.2010 தேதிதயிட்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று சொல்லி தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே 25.02.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் தற்போது அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை செல்லாது என்று கோரி வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எங்கள் இருவருக்கும் உள்ள தடப்பிரச்சனை சம்மந்தமாக தான் நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்றம் தன்னிச்சையாக ஆணையர் நியமனம் செய்து வழக்கு சொத்து மற்றும் பாதை சம்மந்தமாக பார்வையிட்டார் என்று சொன்னால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு சர்வேயர் மூலம் அளவீடு செய்து அறிக்கையும் மாதிரி வரைபடமும்

ஆணையர் தாக்கல் செய்ததற்கு நான் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

14) அவ்வாறு அளவீடு செய்தபோது என்னுடைய சொத்திற்காக விடப்பட்ட பாதையானது ஞானவேல் என்பவருடைய சொத்தில் ஒரு பகுதி செல்வதாக அடையாளம் காணப்பட்டது. பிரதிவாதி அந்த பாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று அந்த ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினை மூலம் எனக்கு விடப்பட்ட சொத்து ஞானவேல் பாகத்தில் போகிறது என்றும் அந்த பாதையை பிரதிவாதி இடத்தில் விடவேண்டும் என்று பிரச்சனை செய்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 25.02.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோருவதற்கு கால வரையறை சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

15) மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய விவரம் தெரியும் என்றும் நான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் அப்பா போட சொன்னதால் கையெழுத்து போட்டேன் நான் அதை படித்து பார்க்கவில்லை. எனது அப்பாவும் பிரதிவாதியும் பாகப்பிரிவினை எழுதிய விவரம் 2010 ம் ஆண்டே எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சொத்தில் 25.02.2010 ம் ஆண்டே பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய கோரி எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்திற்கு பாதை பிரச்சனை இருப்பதால் பிரதிவாதிக்கு மன உளைச்சல் ஏற்படுத்தும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. லிங்கம் பூசாரி குத்தகைக்கு ஓட்டியதாக சொல்வற்கு எவ்வித ஆணமும் தாக்கல் செய்யவில்லை. எந்த ஆண்டு எவ்வளவு ரூபாய்க்கு ஓட்டினார் என்ற விவரத்தையும் என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

25.02.2010ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது அப்பாவுக்கும் பிரதிவாதிக்கும் சுயார்ஜீதமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறாக சொல்லப்பட்டு இருக்கலாம். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித வியாஜ்ஜிய மூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.09.23 17:56:37 +0530

**Subordinate Judge, Attur.**